தினமணி

Friday, June 08, 2012 7:12 PM IST









தமிழகம்

## சூரியனைக் கடந்தது வெள்ளி: பிர்லா கோளரங்கில் சிறப்பு ஏற்பாடு: 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கண்டுகளிப்பு

First Published : 07 Jun 2012 03:00:31 AM IST



சென்னை, ஜூன் 6: பூமிக்கும் சூரியனுக்கும் நேர் குறுக்கே வெள்ளிக் கோள் கடந்து செல்லும் நிகழ்வைக் காண சென்னை காந்தி மண்டபம் சாலையில் உள்ள தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் (பிர்லா கோளரங்கம்) சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சென்னையில் காலையில் 5.43 மணிக்கு தொடங்கிய இந்த நிகழ்வு 10.23 மணி வரை நடைபெற்றது. இதை தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்திலிருந்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கண்டுகளித்தனர். இதுதவிர சென்னை பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரை, தாம்பரம் பழைய ஏரி பகுதிகளில் தனியார் சார்பில் டெலஸ்கோப் மூலம் பார்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சிறப்பு ஏற்பாடு: தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய வளாகத்தில் உட்புறச் சாலையில், இந்த நிகழ்வை பொதுமக்கள் பார்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அரிய நிகழ்வை நேரடியாகக் காணும் வகையில், நேரடி பார்வைக்கான டெலஸ்கோப் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. இதில் நீண்ட வரிசையில் நின்று மாணவர்களும், பொதுமக்களும் பார்த்துச் சென்றனர்.

இதுதவிர, ஒளி பிரதிபளிப்பு டெலஸ்கோப் 4 வைக்கப்பட்டு, வெள்ளைத் திரையில் சூரியனின் நிழலும், கடந்து செல்லும் வெள்ளிக் கோளின் நிழலும் விழும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் வட்ட வடிவமான சூரிய நிழலில், கரும் புள்ளியாகத் தெரிந்த வெள்ளிக்கோள் மெல்ல மெல்ல நகர்ந்து சென்றதைக் காண முடிந்தது. மேலும் எண்.14 ரக வெல்டிங் கண்ணாடிகள் 20 வைக்கப்பட்டிருந்தன. இதில் சூரியனை கரும் புள்ளியாக வெள்ளிக் கடந்து செல்வதைக் காண முடிந்தது.

இலவச சிறப்பு கண்ணாடிகள்: இவை தவிர தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் இந்த நிகழ்வை பார்க்க வந்த அனைவருக்கும் அட்டையால் செய்யப்பட்ட சிறப்பு கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

இதுபோல், பல்வேறு வகையான டெலஸ்கோப், கண்ணாடிகள் மூலம் காண ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால், மையத்துக்கு வந்த அனைவரும் பொறுமையாக கண்டுகளிக்க முடிந்ததாகத் தெரிவித்தனர்.

மேலும் இங்கு வந்த அனைவருக்கும் வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பிப்பதற்காக இலவசமாக தொப்பியும், இந்த நிகழ்வின்போது சாப்பிட்டால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்பதை நிரூபிப்பதற்காக சாப்பிட பிஸ்கெட்டும் கொடுக்கப்பட்டது.

தூரத்தைக் கணக்கிட்ட பல்கலைக்கழக மாணவர்கள்:இந்த நிகழ்வின்போது சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயான தொலைவைக் கணக்கிடலாம் என்பதால், மையத்துக்கு வந்த சென்னை பல்கலைக்கழக மற்றும் எஸ்.ஆர்.எம்., அமிர்தா பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்வத்துடன் சூரியனுக்கும், பூமிக்கும் இடையேயான தூரத்தையும், வெள்ளிக்கும் பூமிக்கும் இடையேயான தூரத்தையும் ரேடார் அலைகளைச் செலுத்தி கணக்கிட்டனர்.

பூமியிலிருந்து வெள்ளி 4.34 கோடி கிலோமீட்டர் தொலைவிலும், சூரியன் 15 கோடி கிலோமீட்டர் தொலைவிலும் உள்ளன.

செட்டிநாடு வித்யாஸ்ரம் பள்ளி, கோபாலபுரம் எம்.டபிள்யு.ஏ. பள்ளி, கோட்டூர்புரம் ஏ.எம்.எம். பள்ளி




புகைப்படங்கள்


நடிகை தீபா ஷா


நடிகை பாசில்


ஏற்காடு மலர் கண்காட்சி


சகுனி


ஒலி ஒளி காட்சி


நடிகை த்ரிஷா

மேலும் படங்கள்...

பிற செய்திகள்

புதுக்கோட்டை இடைத்தேர்தல் வாக்குப்பதிவுக்கு மூன்றடுக்குப் பாதுகாப்பு

நுழைவுத் தேர்வு கூடாது: ராமதாஸ்

பாசி நிதி நிறுவன மோசடி விவகாரம்: இயக்குநர்கள் மீது குற்றச்சாட்டு பதிவு

தேமுதிக வேட்பாளர் மீது மேலும் ஒரு வழக்கு

அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞராக எஸ். சண்முக வேலாயுதம் நியமனம்

இன்று சென்னை வருகிறார் ஆ.ராசா: 10-ம் தேதி நீலகிரி பயணம்

பொதிகை விரைவு ரயிலில் கூடுதல் பெட்டி

சென்னை உயர் நீதிமன்ற கலங்கரை விளக்கத்தை பராமரிக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவு

நீதிபதிகள் நியமனத்தில் வெளிப்படைத்தன்மை தேவை: உச்ச நீதிமன்ற நீதிபதி வலியுறுத்தல்

அடுத்தாண்டு மார்ச்சில் மெட்ரோ ரயில் பணிமனை தயார்

திருச்செந்தூர் கோயிலில் மே மாத வருவாய் ரூ. 2.65 கோடி



என்பன உள்ளிட்ட பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் இந்த அரிய நிகழ்வை கண்டு மகிழ்ந்தனர்.

இந்த அரிய நிகழ்வைக் காண்பதற்காக காலை 6 மணிக்கே தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்துக்கு வந்துவிட்டோம். டெலஸ்கோப்பில் மட்டுமின்றி பெரிய திரையிலும், டிவி-யிலும் வெள்ளி சூரிய கடப்பை காணும் வகையில் சிறப்பு ஏற்பாடு மையத்தில் செய்யப்பட்டிருந்தது. இதனால் நகர்வு முழுவதையும் எங்களால் தெளிவாகக் காண முடிந்தது. மிகவும் பிரமிப்பாக இருந்தது என செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியைச் சேர்ந்த 10-ம் வகுப்பு மாணவர்கள் ஈஷ்வர், ஸ்ரீநாத், விஷால் ஆகியோர் கூறினர்.

இதுபோல், மைய வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த குறிப்புகளும், இந்த நிகழ்வு ஏன் ஏற்படுகிறது, எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் என்பன உள்ளிட்ட பல்வேறு விளக்கக் குறிப்புகளும், இலவசமாக விநியோகிக்கப்பட்ட விளக்கப் புத்தகமும் மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக சென்னைப் பல்கலைக்கழக எம்.ஃபில். இயற்பியல் துறை மாணவி அஷ்வினி மற்றும் சங்கர வித்யாலயா பள்ளி 10-ம் வகுப்பு மாணவி திவ்யா ஆகியோர் கூறினர்.

காலை 3.39 மணிக்கே...: சூரியனை வெள்ளி கோள் கடக்கும் நிகழ்வு காலை 3.39 மணிக்கே தொடங்கி விட்டது. ஆனால், இந்த நேரத்தில் இந்த நிகழ்வை ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கிழக்கு சீனா, ஹவாய் தீவுகள் உள்ளிட்ட பகுதிகளில் மட்டுமே காண முடிந்தது. இந்தியாவில் காலை 5.43 மணி முதல்தான் இந்த நிகழ்வு நடைபெறத் தொடங்கியது.

ஆசிரியர்களுக்குப் பயிற்சி

இந்த அரிய நிகழ்வை சென்னையைத் தவிர்த்து திருச்சி, கோவை, வேலூர், திருநெல்வேலி, நாகப்பட்டினம், தூத்துக்குடி உள்ளிட்ட பிற பகுதி மக்களும் பார்க்கும் வகையில், ஆசிரியர்களுக்கு டெலஸ்கோப் கையாள்வதற்கான பயிற்சியை தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் அளித்துள்ளது.

இதுகுறித்து மையத்தின் செயல் இயக்குநர் அய்யம் பெருமாள் கூறியது: கடந்த ஏப்ரல் 24, 25 தேதிகளில் சென்னையிலும், மே 24, 25 தேதிகளில் திருச்சியிலும் 200 ஆசிரியர்களுக்கு சிறிய வகை டெலஸ்கோப் கையாளும் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் அந்தந்தப் பகுதி மக்கள் சிறிய வகை டெலஸ்கோப் மூலம் இந்த நிகழ்வைக் காண்பதற்கான ஏற்பாடுகளை புதன் கிழமை செய்திருந்தனர் என்றார் அவர்.

Email Print Delicious Digg Facebook Twitter

1 கருத்துகள்

கருத்துகள்

“ சூரியனுக்கு ஓர் திருஷ்டிப் பொட்டு. ”

By **karikalan**
6/7/2012 10:34:00 AM

உங்கள் கருத்தைப் பதிவு செய்யுங்கள் *

(Press Ctrl+g or click this [ ] to toggle between English and Tamil)

இ-மெயில் *

பெயர் *

சரிபார்ப்பு எண் *

5017472

மேற்காணும் எண்ணை பதிவு செய்க *

குறிப்பு: வாசகர்கள் பதிவு செய்யும் கருத்துகள் ஆசிரியர் குழுவின் பார்வைக்கு பிறகே வெளியிடப்படும். வாசகர்களின் கருத்துகள் தினமணியின் கருத்துகள் அல்ல. வாசகரின் கருத்துக்கான முழுப் பொறுப்பும் அவரையே சாரும். நாகரீகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம். தனி நபர் தாக்குதலை, கட்டுரைகளுக்குப் பொருத்தமில்லாத கருத்துகளை வாசகர்கள் இங்கே இடவேண்டாம். வாசகர்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு வாய்ப்பளிக்கும் இந்தப் பகுதியைத் தவறாக பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். நாகரீகமற்ற கருத்துகள் குறித்து எங்கள் கவனத்துக்கு கொண்டுவந்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.


தேர்தல் வழக்கை சந்திக்க வேண்டும்: ப.சிதம்பரத்தின் மனு தள்ளுபடி

குரூப் 4 தேர்வுக்கு கட்டணம் செலுத்த இன்று கடைசி

ஜூன் 10 முதல் பெங்களூர் - நெல்லை வாராந்திர சிறப்பு ரயில்

அங்கம்மாள் காலனியில் உண்மை கண்டறியும் குழு ஆய்வு: இன்று இடைக்கால அறிக்கை வெளியிடுகின்றனர்

சிதம்பரத்துக்கு எதிரான வழக்கு ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது: வழக்குரைஞர் விளக்கம்

கொலை வழக்கில் கே.பி.பி. சாமிக்கு ஜாமீன்

தேர்தல் செலவு கணக்கில் வேறுபாடு: அதிமுக, தேமுதிக வேட்பாளருக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ்

மத்திய மின் தொகுப்பு மையத்துக்கு நிலம் கையகப்படுத்த வந்த அதிகாரிகளை முற்றுகையிட்ட 25 விவசாயிகள் கைது

எம்ஜிஆர் தன்னுடைய சாதனைகளை விளம்பரம் செய்ததில்லை:விஜயகாந்த்








Post

Recommendations

facebook

Sign Up Create an account or log in to see what your friends are recommending.



இலங்கைக்கு அமெரிக்கா கடும் எச்சரிக்கை | Latest News | Dinamani

7 people recommend this.



கருணாநிதிக்கு ஒரு பகிரங்கக் கடிதம் | Editorial Articles | Dinamani

153 people recommend this.



ஒரே சமயத்தில் 2 பேரை காதலித்து ஒருவரை மணந்த பெண்: சேலத்தில் பரபரப்பு | Latest News | Dinamani

24 people recommend this.



எம்.ஜி.ஆரும் இந்திரா காந்தியும் இருந்திருந்தால் இப்போது ஈழத்தில் வாழ்ந்திருப்போம் | Kadhir | Dinam

170 people recommend this.

Facebook social plugin



© Copyright 2012, The Dinamani.com. All rights reserved.